3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

சென்னை நகர தீ விபத்துக்கள் குறித்து திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் வர்களுடைய ஒற்றிவைப்புத்அ தீர்மானத்தைப் படிப்பார்கள்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன் :--

"சென்ற 10 தினங்களாகத் தொடர்ந்து ஏழை மக்கள் வாழும் குடிசைகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வரும் இந்த சமயத்தில், பொதுமக்களும், அரசும், முதல் மந்திரி அவர்களின் தலைமையில் அமைந்துள்ள சர்வகட்சிக் குழுவும் வேதனை நிறைந்த உள்ளங்களுடன் நிவாரணப்பணிகளை மேற்கொண்டுவரும் இந்த சமயத்தில் பொறுப்புள்ள முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் 'சென்னை நகரில் சமீபத்தில் நிகழ்ந்துள்ள தீ வைப்புச் சம்பவங்களுக்குக் காரணமாக உள்ள குற்றவாளிகளைக் காட்ட தம்வசம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும்' . . . 'ஆனால் இச்சம்பவங்களுக்கான காரணங்களைக் குறித்து தற்போது போலீசார் புலன் விசாரணை நடத்திக்கொண்டிருப்பதால் தாம் அவற்றை வெளியிடப்போவதில்லை' என்றும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளதாக பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. இது மிகவும் வியப்பூட்டுகிறது, ஆபத்தானது.

இன்னும் தொடர்ந்து இங்குமங்குமாக தீ விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தன்னிடமுள்ள 'போதுமான ஆதாரங்களை' முதல் அமைச்சரிடம் தந்து மேலும் இச்சம்பவங்கள் நடவாமல் தடுக்க அவர் முன்வந்திருக்க வேண்டும். மாறாக அவரது பேச்சு நிலைமையை மேலும் குழப்படி செய்து பொதுமக்கள் மத்தியில் பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

ஆகையால், இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து விவாதிக்க இச்சபையை ஒத்திவைக்கவேண்டு மெனக் கோருகிறேன்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காக இந்த அவையின் அலுவல்களைத் தள்ளிவைக்கவேண்டுமென்று சொல்ல ஏதாவது காரணங்களிருந்தால் சுருக்கமாகச் சொல்ல உறுப்பினருக்கு அனுமதி உண்டு.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: மன்றத் தலைவர் அவர்களே, திரு. பக்தவத்சலம் அவர்களுடைய பேச்சு 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் 9 ம் தேதி வெளிவந்திருக்கிறது. அதேமாதிரி 'தினமணி' பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது. இரண்டிலும்

வாசகங்கள் ஒரே மாதிரியான வாசகங்கள். எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அவர் வேறு ஒன்றும் சொல்லவில்லை, இதைத் தான் சொல்லியிருக்கிறார் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லாமல், இரண்டு பத்திரிகைகளிலும் வாசகங்கள் ஒரே மாதிரி அமைந்திருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன்.

இது குறித்துப் பேசும்போது நமக்குக் கவலையாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, குற்றவாளிகளைக் காட்டத் தன்னிடம் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் மிகவும் பொறுப்பான பெரியவர்; முதிர்ந்த அரசியல் வாதி; 20 வருஷங்களாகத் தொடர்ந்து அமைச்சராக இருந்தவர் முதலமைச்சராக இருந்தவர்; போலீஸ் இலாகாவைத் தன்கையில் வைத்துக்கொண்டு அதை உபயோகப்படுத்திப் பழக்கப்பட்டவரும் கூட; வழக்கறிஞர்; சட்ட விவரங்கள் நன்றாகத் தெரிந்தவர். அவருக்கு சட்டம் தெரியாது என்றோ, விவரம் தெரியாது என்றோ நான் சொல்லவில்லை; யாரும் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்கள் தமிழ் நாட்டில் ஒரு வழி காட்டியாக இருக்கக் கூடிய நிலையில் இருப்பவர், இப்படிப்பட்ட பேச்சைச் சொல்லியிருக்கிறார் என்றால், அது குறித்துப்பெரிய கலக்கம் ஏற்பட்டிருப்பதில் எந்த விதமான வியப்பும் இல்லை.

கிரிமினல் ப்ரொஸீஜர் கோடில் 44-வது பிரிவு இருக்கிறது. அதையெல்லாம் படித்து அவையின் நேரத்தைப் போக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அந்தப் பிரிவு, சில குற்றங்கள் நடப்பதாக, நடப்பதற்கு உத்தேசம் இருப்பதாக, தகவல் இருந்தால், அந்தத் தகவலைப் போலீஸாரிடம் தரவேண்டும் என்று விளக்கக்கூடிய பிரிவு. அவ்வாறு தகவல்கள் இருந்தும் போலீஸாருக்குத் தரவில்லையென்றால், அது இண்டியன் பீனல் கோடின் 202-வது பிரிவின் கீழ் குற்றமாகும். தீ விபத்து-மிஸ்ச்சிஃப்பை 'ஃபையர்'—இண்டியன் பீனல் கோடில் 435-வது பிரிவு ஆகும். அந்தப் பிரிவின் கீழ் உள்ள குற்றவாளிகள் யார் என்ற தகவல் இருந்தும் அந்தத் தகவலை கிரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 44-வது பிரிவின்கீழ் போலீஸாருக்குத் தராது இருந்தால் Failure to give the information அது குற்றம் ஆகிறது. இண்டியன் பீனல் கோடின் 202-வது பிரிவின் கீழ் இப்படி வழிகாட்ட வேண்டியவர்களே சட்டம் தெரிந்தும் இந்தக் குற்றம் புரிந்தால் இது நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்த மாதிரிக் குற்றங்களைப் புரிய ஊக்கம் கொடுத்து வழி காட்டுவதாக ஆகும்.

நான் இது குறித்துப் பேசும்போது இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது பொருத்தம் ஆகும். முதலில் இந்த விபத்துக்கள் ஆரம்பித்தபோது இதில் அரசியல் இல்லை என்று நினைத்தவர்களில் நானும் ஒருவன். இப்போது இதிலே அரசியல் நோக்கு, போக்கு இருக்கின்றன என்று பலமான ஆதாரங்கள் வந்திருக்கின்றன. இதே காலத்தில்

1967 ஜூலை 11] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

முதலாளிகளில் சிலர் தங்களுக்கு எதிராக வரும் தொழிற்சங்கத் தலைவர்கள் மீது சில விதமான குற்றச்சாட்டுக்களைக் கொண்டுவர முயற்சி எடுத்து வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி, டி.வி.எஸ். இகாஸ் லாக் அவுட் அதற்காக விளம்பரம், அவர்கள் வெளியிட்டுள்ள காரணங்களைப் பற்றி அறிக்கை, அந்த அறிக்கையைப் படித்தாலும், பின்னர் தங்களது ஆட்சி போன பிற்பாடு ஆதரவற்றுப்போன நிலையில், ஐ.என்.டி.யு.சி. பகுதியினருக்கு ஆதரவு போனது . . .

Mr. SPEAKER: I would be glad if the hon. Member would confine his remarks to the admissibility of the adjournment motion and show it is admissible. Will the hon. Member kindly enlighten me on that point?

திரு. எ. பாலசுப்பிரமணியன்: அவசர பொது முக்கியத்துவம் என்றால் ஒரு விஷயத்தைப்பற்றி பொறுப்புள்ள சில கம்பெனிகள் இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று தங்களிடம் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மேலும் சிலர் இதுபோன்ற அறிக்கைகளை விடுத்து, பாவம் ஒரு புறம், பழி ஒரு புறம் என்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், போலீஸார் புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது, புலன் விசாரணைப் போக்கை ஒரு திசையிலே திருப்பி, செல்வாக்கிற்கு உட்படுத்துவதற்கான முயற்சி நடக்கிறது என்று சந்தேகிக்க இடமுண்டு. அதாவது 'to influence the course of investigation' அப்படி புலன் விசாரணை நடக்கும்போழுது போலீஸ் தலைமை அதிகாரியிடமோ அல்லது முதல் அமைச்சர் அவர்களிடமோ தன்னிடத்திலுள்ள தகவல்களைக் கொடுத்து உதவி செய்திருந்தால், மேலும் தீ வைப்புகளை தடுப்பதற்கான நல்ல நோக்கம் நிறைவேறும். அதற்காகத் தான் நாம் அனைவரும் இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் இதுபோல் அவர் பேசியிருப்பது குறித்து, அதனால் எழுந்துள்ள குழப்பமடி நிலையை விவாதிப்பதற்கு இந்தச் சபையை ஒத்திவைக்கவேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.

Thiru K. VINAYAKAM: Sir, on a point of order. I am at a loss to know how this matter comes under an adjournment motion.

Mr. SPEAKER: That is a matter for me to decide.

Thiru K. VINAYAKAM: Sir, I am coming to the point, Mr. Speaker, Thiru Bhaktavatsalam is not a Member of this House. He is a stranger to this House as far as this House is concerned. What kind of statement he makes outside is his job and it is his look-out and we are not competent to deal with his speech. If, however, he has got information it is for the Police to contact him and do whatever possible in the matter. How are we competent to discuss it? So, this is not a valid adjournment motion.

MR. SPEAKER : The hon. Member is saying exactly what I would have said, if I had not been interupted. திரு. வி. கே. கோதண்டராமன் இதே பிரச்சினையைப் பற்றி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (அவர்கள் அதைப்படித்து, எதற்காக இந்தப் பேரவையை தள்ளி வைக்கவேண்டும் என்பதற் குரிய காரணங்களை மட்டும் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் சபாநாயகர் அவர் களே, "சென்ற பல நாட்களாக தொடர்ந்து ஏழை மக்களின் குடிசைகளுக்கு தீயிட்டு கொளுத்தப்பட்டு வரும் இந்த சமயத்தில் முன்னாள் முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களும், ஒரு உயர் போலீஸ் அதிகாரியும், ஏற்கனவே குழம்பியுள்ள மக்களை மேலும் ஆத்திரப்படும் தன்மையில் பேசியுள்ளது கூட்டாக பேசி யுள்ளது போல் தெரியவருகிறது.

இது இன்றுள்ள சர்க்காருக்கு விரோதமான போக்கில் உள்ள தென்பது மட்டுமல்ல, போலீஸ் விசாரணை நடத்திவரும் இந்த சமயத்தில், இந்த தீ விபத்துக்கு யார் காரணம் என்பது எனக்குத் தெரியும், ஆனால் இப்போது நான் சொல்ல முடியாதென்று திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் கூறுவதும்--இவைகளுக்கெல்லாம் பொறுப்பு மார்க்ஸீயவாதிகளே காரணம், முதலாளிகள் தான் காரணம் என்று சொல்லியுள்ளது சட்ட விரோதமானது மட்டு மல்ல, சர்க்காருக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் விரோத மான நடவடிக்கை எடுக்கும் போக்குமாகும்.

ஆகையால் இது விஷயமாக உடனடியாக தீர்வு காண அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தயவு செய்து சபையை ஒத்தி வைக்க வேண்டுமாக கோருகிறேன்."

ஏற்கெனவே, குடிசைகளுக்கு தீ வைத்துக் கொளுத்தப் படுவது சம்பந்தமாக ஒரு உயர் போலீஸ் அதிகாரி கொடுத்த பத்திரிகை செய்தி சம்பந்தமாக நான் இந்தப் பேரவையிலே ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறேன். அது மாத்திர மல்ல, அதே நேரத்தில் இந்த இரண்டு மூன்று தினங்களாக பத்திரி கைகளில் வரக்கூடிய செய்திகளைப் பார்த்தால் தெரியும். இந்த சட்டமன்றத்தில் திரு. எம். பக்தவத்சலம் அங்கத்தினராக இல்லாமல் இருக்கலாம். சென்ற பல ஆண்டுகளாக அவர் அமைச் சராக இருந்து வந்திருக்கிறார். அது மாத்திரமல்ல, இந்தச் சபைக்கு இன்றைக்கு இழுக்கு வரக்கூடிய தன்மையிலே மாத்திர மல்ல, இந்த சர்க்கார் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படக்கூடிய தன்மையிலே அவர் பேசியிருப்பதாகத் தெரிகிறது. ஏற்கனவே போலீஸ் அதிகாரியின் மீது உரிமைப் பிரச்சினை கிளப்பப்பட்ட நேரத்தில் அவர் இங்கே அங்கத்தினராக இல்லை, இங்கே அதைக் கிளப்பலாமா என்கிற அளவுக்கு ஆட்சேபணை வரவில்லை என்று சொன்னாலும், இந்த நேரத்தில் தங்களைப் பாதிக்கக் கூடிய பிரச்சினையாக இருக்கிற காரணத்

1967 ஜூலை 11] [திரு. வி. கே. கோதண்டராமன்]

திலே, அவர் இங்கே அங்கத்தினராக இல்லை என்று பேசக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. இது வருத்தப்படக்கூடிய விஷயம் மாத்திரமல்ல. இன்றைக்கு உள்ள நிலைமை என்ன? உண்மையிலேயே பொறுப்புள்ளவர் மாத்திரமல்ல, அவர்களுக்கு விஷயம் புரியாது என்றுகூட சொல்லிவிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள் கூர்ந்து முன்னாள் முதல் அமைச்சர் பற்றி இப்படிப்பட்ட சொற்களைச் சொல்வது அவ்வளவு அழகாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் சொலகிற விளக்கத்தை நான் நன்றாக புரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, என்னுடைய தீர்ப்பை வழங்குவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதற்காக வேண்டிய நன்மை செய்யவேண்டுவது முறை. அதற்குப் பதிலாக இரண்டு பேர்களும் தனித் தனியாக இப்படி பேசிவருவது, இரண்டு பேர்களும் திட்டமிட்டே ஏதோ இது போன்றே நடந்துவருகிறது என்பது தான் இதிலிருந்து தெரியவருகிற ஒரு முக்கியத்துவம். அது மாத்திரமல்ல, பொறுப்புள்ள ஒரு சில காங்கிரஸ்காரர்கள் கூட இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆட்சி பீடத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தான் தீ வைத்திருக்கிறார்கள் அல்லது அவர்களைச் சார்ந்திருக்கிற இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தீ வைத்திருக்கிறார்கள் என்று சொன்னதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இப்படி தொடர்ந்து இது போன்ற மிக மோசமான அளவுக்கு வதந்திகளைக் கிளப்பி விடக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. கேள்வி நேரத்தில் கேள்வி கேட்டால், அது கோர்ட்டில் இருக்கிறது, போலீஸ் விசாரணையில் இருக்கிறது, அதைப்பற்றி கேட்கக்கூடாது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி இருக்கும்போழுது மிக முக்கியமான ஒரு பிரச்சினையில் ஈடுபட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் முக்கியமான நபர்கள் இப்படி பேசியிருப்பது இந்த நாட்டுக்கு மாத்திரமல்ல, இந்த நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைக்கக்கூடிய தன்மையிலே இருக்கிறது. ஆகவே, தற்பொழுது குற்றச் சட்டங்கள் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதற்காக வேண்டி விவாதிக்கவேண்டும் என்பதற்காக இந்தச் சபையை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினால், அவை முன்னவரும் பேசவேண்டியிருக்கும்; இப்படி பேசிக்கொண்டே போனால் இன்றைய அலுவல்கள் எப்படி நடக்கும்? ஆகவே, என்னை தீர்ப்புச் சொல்வதற்கு அனுமதி

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்தச் சபையின் நேரத்தை வீணாக்குவதில் எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது திரு. எம். பக்தவத்சலம் பற்றி மிகவும் தரக்குறைவான வார்த்தைகளை உபயோகப்படுத்தினார்கள். ஆகவே, அந்தப் பேச்சை எடுத்து வைத்துப்பார்த்து, நீக்க வேண்டிய பகுதிகளை நீக்கிவிடுவதற்கு உத்தரவிடவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன வார்த்தைகளை நீக்க வேண்டும் என்று சொல்லுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இன்ஸினுவேஷன், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்காக, தற்காப்புக்காக, அதாவது திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் பேசும் பொழுது தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்வது போல் பழி போடுகிறார் என்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தச் சொல்லை நீக்க வேண்டும்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பிறர் மேல் பழி போடுவதாகச் சொன்னார்.

திரு. என். சங்கரய்யா: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். தரக்குறைவான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டனவா, இல்லையா என்று தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு கனம் சபாநாயகர் அவர்களைச் சேர்ந்தது. மன்றத்தில் ஒரு தனிப்பட்ட உறுப்பினர் அதுபற்றி எப்படி தீர்ப்புக் கூற முடியும்? கனம் சபாநாயகர் அவர்கள் தான் தீர்ப்புக் கூறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் Speaker's eye is elusive என்று சொன்னார்கள். Speaker's ear is also elusive. அதனால் எப்பொழுதாவது உறுப்பினர் சொன்னது என் காதில் விழாமல் இருக்குமானால், அதைப் பற்றி மற்றொரு உறுப்பினர் சொல்வதில் தவறு இல்லை. அவர்கள் சொன்னதிலே நடவடிக்கை குறிப்புகளிலிருந்து நீக்கக் கூடிய சொற்கள், நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல் இல்லை. திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஏதோ பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய செய்திகள், இன்னார் இன்னபடி சொன்னார்கள் என்ற செய்திகளெல்லாம், இந்தப் பேரவைக்கு இழுக்குத் தேடித் தரத்தக்கவை என்று குறிப்பிட்டுச் சொன்னார் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவருவது பற்றி அவர்களுக்கு நான் விதியை மீண்டும் சுட்டிக் காட்டுவது பற்றி என்னை மன்னிக்க வேண்டும். 50-வது விதியில் 6 என்று உள்விதியைப் பார்த்தால், பேரவைக்கு இழுக்கு உண்டாக்கக்கூடிய ஒரு காரியமாக இருக்குமானால், அதை அவையுரிமைக் கேள்வி

முற்பகல் 11-00

யாகக் கொண்டுவர முடியும், ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவர முடியாது என்பது தெரியும். மேலும், திரு. கோதண்டராமன் அவர்களும் திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களும் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு விவாதங்களை எழுப்புவதானால், முதலில் அந்தப் பத்திரிகையில் வந்த செய்தி சரியா என்று பார்க்க வேண்டியிருக்கும். திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்த அரசின் அன்றாட நிர்வாகத்திற்குப் புறம்பானதாக இல்லை, உட்பட்டதாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டினார்கள். 202 என்ற விதியை எடுத்துக் காட்டினார்கள். கிரிமினல் புரொசீஜர் கோடு 44 என்ற விதியை எடுத்துக் காட்டினார்கள். நமது பேரவை விதி 50 (8)-லே சொல்லியிருக்கிறபடி,

In order to be allowed as an adjournment motion, the matter to be discussed must involve more than the ordinary administration of the law.

என்று இருப்பதனாலும், சட்டத்திற்கு உட்பட்டது என்று பீனல் கோடு, கிரிமினல் புரொசீஜர் கோடு என்றெல்லாம் சுட்டிக்காட்டி சட்டத்திற்கு உட்பட்டது என்று அவர்களே கூறியிருப்பதன் காரணமாகவும், அதற்காகப் பேரவை நடவடிக்கைகளைத் தள்ளி வைக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் அவர்கள் கூறிய காரியம், இது வரை அரசுக்குத் தெரியாமலிருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவர, அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தது போதும்; என்று கூறி ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு இசைவு தருவதற்கு நான் மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

வட ஆற்காடு மாவட்டத்தில் சர்க்கரை, கோதுமை தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின் கீழ் திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் உடனடி முக்கியமான காரியம் ஒன்றை, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

*** திரு. எஸ். ஜே. ராமசாமி:** சட்டமன்றத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் பூராவிலும், குறிப்பாக அரக்கோணம் நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பொது மக்களுக்கு சர்க்கரை, கோதுமை இவை இரண்டும் கிடைக்காமல் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அரக்கோணம் நகரத்தில் கோதுமை விநியோகிப்பது அடியோடு நின்று விட்டதால் "டையாபிடிஸ்" வியாதியுள்ளவர்கள், வடநாட்டைச் சேர்ந்தவர்கள் மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் இதில் முக்கியமான சிரத்தை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இதை மாண்புமிகு உணவு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கும் கோதுமை, சர்க்கரை அளவைக் குறைத்துள்ள காரணத்தால் இம்மாநிலத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்திலும் பிற மாவட்டங் களிலும் இப்பொருள்களில் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் சராசரித் தேவை மாதத்திற்கு 10,000 டன் கோதுமை யாகும். 1967 ஜனவரியிலிருந்து மே வரையில் இம்மாநிலத்திற்கு மொத்தம் 17,500 டன் கோதுமையே ஒதுக்கப்பட்டுள்ளது; இதனால் மாதத்திற்கு 3,500 டன் கோதுமையே ஒதுக்கப்பட்டதாக ஆகிறது. இம்மாநிலத்திற்கு மிகக் குறைந்தளவு கோதுமை வழங்கப் பட்டதன் விளைவாக, மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு பெரிதும் குறைக்கப்பட வேண்டியதாயிற்று. சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் கோதுமை பயன்படுத்துவோர் அனைவருக் கும் அதனை வழங்க முடியாத நிலை ஏற்பட்டதால், கோதுமை பங்கீட்டுப் பொருள் அல்ல என்று அறிவிக்கப்பட்டது. கோதுமை பெறத்தக்க வேறு வழி எதுவும் இல்லாததால், இம்மாநிலத்தின் கோதுமைத் தேவைக்கு இந்திய அரசையே நமது மாநிலம் நம்பியிருக்க வேண்டியுள்ளது.

கோதுமை மிக எளிதில் கிடைக்கும்போது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 700 டன் கோதுமை செலவாகும். இதற்கு எதிராக, 1967 மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் ஒவ்வொன் றிலும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 50 டன் கோதுமையே ஒதுக்கப்பட்டது. ஜூன் மாதத்தில் இது 250 டன்னாக உயர்த்தப் பட்டது. எனவே, இவ்வாண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமை அளவு அதன் தேவைக்கு மிகக் குறைந்ததாகும். மற்றும், வட ஆர்க்காடு மாவட்டத்தின் பற்றுக் குறைப் பகுதிகளான குடியாத்தம், வேலூர் தாலுக்காக்களில் குடும்பக்கார்டு முறை செயலில் உள்ளது. இத்தாலுக்காக்களுக்கு உபரி தாலுக்காக்களிலிருந்து அப்போது அரிசி போதிய அளவிற்கு வராததால் இங்கே வழங்கப்படும் அரிசியுடன் கோதுமையும் சேர்த்து வழங்க வேண்டியிருந்தது. எனவே, இந்த மாதங்களில் அரக்கோணம் தாலுக்காவிற்கு கோதுமை எதுவும் வழங்கப்பட முடியவில்லை. எனினும், மே மாதத்தில் வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல், விற்பனைச் சங்கம் மூலம் அரக்கோணம் தாலுக்காவிற்கு மூன்று டன் கோதுமை அனுப்பப்பட்டது. கோதுமை மூட்டைகள், வேலூரில் உள்ள மேற்சொன்ன சங்கத் தால் தரப்படுத்தப்பட்ட பின்னர் பொதுமக்களுக்கு வழங்கப் படுவதற்காக அதன் அரக்கோணம் கிளைக்கு அனுப்பப்பட வேண்டும். எனவே, வேலூரிலிருந்து அரக்கோணத்திற்குக் கோதுமை அனுப்பப்படுவதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது. ஜூன் மாதத்தில் இந்திய அரசு இம்மாநிலத்திற்கு அதிக அளவு கோதுமை ஒதுக்கியதால், ஜூன் மாதத்தில் வட ஆர்க்காடு மாவட் டத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமைப் பங்கீட்டளவு 250 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. அரக்கோணம் தாலுகாவிற்கு ஒதுக்கப்

படுகிற கோதுமையின் அளவும் உயரும். இதன் மூலம் கோதுமையை இன்றியமையாது பயன்படுத்துவோர் உட்பட பொது மக்களுக்கு ஓரளவிற்குப் பரிகாரம் கிட்டுமென எதிர்பார்க்கிறோம். இதுதவிர, கோதுமையை உணவாகக் கொள்ள வேண்டியிருக்கும் பிணியாளர்களுக்கு மிகக் குறைந்த அளவில் உள்ள மாவட்டச் சேமிப்பகத்திலிருந்து வேண்டுகோளின் பேரில், தனி அனுமதிச் சீட்டுகளை வழங்கி கோதுமை வழங்கப்பட்டு வருகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் சர்க்கரைத் தேவை மாதம் 1,200 டன் ஆக இருக்க, அதனை 605 டன் அளவிற்குக் குறைத்ததால், 1967 ஜூன் மாதத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சர்க்கரைப் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்திய அரசு இம்மாநிலத்திற்கு வழங்கும் சர்க்கரையின் அளவைக் குறைத்ததனால், மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் சர்க்கரையின் அளவினை விகிதாசாரப்படி குறைக்க வேண்டிவந்தது. இதுவே வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கவேண்டிய சர்க்கரையின் அளவைக் குறைத்ததற்குக் காரணமாகும்.

5. அரசினர் மசோதாக்கள்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மிக்கரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு, தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மிக்கரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மசோதாவினை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.

6. அறிவிப்புகள்.

(அ) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவை இப்பேரவையில் கொண்டுவருவதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேன்மைமிகு கவர்னரவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று அறிவிக்கிறேன்.

(5) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மசோதாவினை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய் யப்பட்டது.

7. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து நிதிக் கோரிக்கைகள். இன்றைக்கு மூன்று கோரிக்கைகள் உள்ளன. முதல் கோரிக்கை, அரசாங்க வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு பற்றி எண் 46, ஏறத்தாழ ஒரு மணி வரையில் எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின்பு ஒரு கோரிக்கை எண் 47, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் பற்றி, 1-30 வரையில்; மாலையில் தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற பகுதி, கோரிக்கை எண் 24 எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள், அவருடைய கோரிக்கையைக் கொண்டு வருவார்கள்.

கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங் களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 85,89,07'100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

THIRU M. WILLIAM : To discuss about the procurement policy, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 85,89,07,100 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100.'